க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925௵ பிப்ரவரிமீ | இதழ் 6.

தெய்வ வழிபாடு.

"ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற கரியவனைத்
தோயும் படிக்குக் கருணைசெய் வாய்சுக வான்பொருளே
தாயும் பிதாவுந் தமருங் குருவுந் தனிமுதலும்
நீயும் பரையுமென் றேயுணர்ந் தேனிது நிச்சயமே."

மலையாளமேல் சீலைபோடல்.

மலையாளம் என்பது சென்னை ராஜதானியின் மேல்கடற்கரையோரத்திலிருக்கும் திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஜில்லாக்களாகும். இம்மலையாளத்தை ஆளுபவரும், ஆண்டவரும் நாயர் ஜாதியாராவர். இவர்களையே அப்பகுதிக்கு அரசவம்சத்தவராகக் கொள்ளப்படும். இவர்களது பெண்களும், புருஷரும் மேலாடையின்றி, நாலுமுழத் துண்டையே அரையில் அணிவர். தற்கால நாகரிகத்தை யநுசரித்து பெண்கள் ஒரு துண்டை மார்பின்பேரில் அணிவர். (Thurston's Castes, Vol. V, P. 312 see a picture) அப்படி அணிவதும் அவர்கள் வீட்டைவிட்டு வெளிசெல்லுங் காலத்திலேயேயாம். வீட்டிலிருக்கும் காலத்தில் மேலாடையணிவதில்லை. இது அந்தரப வம்சத்தவர்களுக்குள் சாதாரண வழக்கம். நான் ஏழுயெட்டு வருடங்களுக்குமுன் பாலகாட்டிற்குச் சென்றேன். அங்கொரு கோட்டையுண்டு. அக்கோட்டையில் தற்காலம் நியாயஸ்தலம் வைக்கப்பட்டுள்ளது. அக்கோட்டையையும், அதைச் சூழ்ந்த பாலக்காட்டையும் பூர்வம் ஆண்டவர்கள் நாயர் வம்சத்தவர்களே யாவர். அவ்வம்சத்தவர்கள் தற்காலம் ஒலவக்கோடு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சற்று வடக்கில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு அங்கிலேயர் நாளதும் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுத்துவருகிறார்கள். எமக்கு அந்த பாலகாட்டு ராஜாக்களையும், ராஜஸ்திரீக்களையும் காணநேர்ந்தது. அந்த ராஜஸ்திரீகள் மேலாடையின்றி அரையில் கட்டிய நாலுமுழத் துண்டோடு, வீட்டு வாயில்களிலும், மேல்மெத்தைகளிலும் நின்றிருக்க யாம் கண்கூடாகக் கண்டனம். இவர்களை

அந்த மலையாளத்திற்கு உயர்ந்த வம்சத்தவர்களும், இராஜாங்கிரிகளுமாவர். இவர்கள் வம்சத்திலேயே கொச்சி ராஜாவும் உட்படுவர்.

"The fact seems to be that successive waves of immigration brought from the Canarese and Tamil cotntries different castes and different tribes; and these, settling down in the Country, adopted the Customs and manners, and assumed the Caste names of the more respectable of theCommunity that surrounded them. This process of assimilation is going on even yet." Vide. Thurston's Castes and Tribes of Southern India Vol. V, P. 284.

"தமிழ் தேசங்களிலிருந்தும், கன்னட தேசங்களிலிருந்தும் பெரும் வாரியாக பலசாதியார்கள் மலையாளத்தில் குடியேறி, மலையாளிகளது பழக்க வழக்கங்களையும், உடை அணிகளையும் அனுசரித்து வந்தார்கள். நாளதும் வருகிறார்கள்" எனத் தர்ஸ்டன் துரை அவர்கள் கூறுகிறார். இப்பகுதியை அனுசரித்து 200-வருடங்களுக்குமுன் பாண்டிய நாட்டிலிருந்து, வட திருவிதாங்கூரில் குடியேறிய நாடார்களும், அம்மலையாளத்தில் உயர்ந்த வம்சத்தவராக மதிக்கப்படும் நாயர்களது நடை உடை பாவனைகளையும், பழக்க வழக்கங்களையும், துணியணி முதலியவைகளையும் பின்பற்றினார்கள். இவர்களைப்போல் தற்காலமும் செட்டி, கொல்லரும் அந்நடையி லிருக்கிறார்கள். (Refer, Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, P. 284.) அதாவது நாலுமுழத் துண்டை அரையில் ஆணும் பெண்ணும் அணிந்துவருகிறார்கள். இவ்விதம் மலையாளத்தில் குடியேறிய மற்ற சாதியார்களைப்போல், வட திருவிதாங்கூரில் குடியேறிய நாடார்கள் பெண்களும் அரையாடை யொன்றையே அணிந்துவந்தார்கள். (தென் திருவிதாங்கூரிலுள்ள நாடார்கள் என்றும் அம் மலையாள வழக்கத்தை பின்பற்றினவரல்லர்.) இவ்விதம் வட திருவிதாங்கூர் நாடார்கள் அணிந்துவருங் காலத்தில், அந்நாடார்கள் தங்களது முன்னோர்களின் நிலைமையையும், தங்கள் முன்னோர்களின் பூர்வீக வாஸஸ்தானத்தையும், தாங்கள் இன்னார் என்பதையும் ஆராய்ந்தறிந்து, ஒரு வித எழுச்சிகொண்டு, தாங்கள் இதுவரைக்கும் நடந்துவந்தது தவறென உணர்ந்து, தங்கள் முன்னோர்களின் நிலைமையை அடைய முன்வந்து, மேலாடை யணியத் துணிந்தனர்கள். மேலாடையே இன்னதென் றறியாத நாயர் முதலிய மற்ற சாதியார்கள், தங்களைப் போலல்லாமல், தாங்கள் அனுசரிக்காத நூதன வழக்கத்தில் நாடார்கள் மாத்திரம் நுழைந்ததால் பொறுமைகொண்டு தடுக்கத் துணிந்தார்கள். அப்படி தடுக்க முன்வந்தவர்க ளென்னமோ பாரம்பரையாக அணிந்து வருவது போலவும், அவ்விதம் நாடார் பெண்கள் அணியப்படாதெனவும், தாழ்ந்த சாதியார்களைப் போல் அணியவேண்டுமெனவும் கோணமானலாக பலவித வீண் ரிபோர்ட்டுகளைச் செய்து அலங்கழித்தனர்களே யன்றி, அப்படி யலங்கழிந்து, பட்டாங்குபேசி, உயர்ந்த சாதியெனக் கூறிய நாயர்களோ நாளதும் மேலாடை யணிவதில்லை.

நான் சென்ற 1924ல் திருவிதாங்கூர் நாகர்கோயிலில் கூடிய கான்பரன்சுக்கு சென்றபோது, ஒரு நாயர் குடும்பத்தை சந்திக்க நேர்ந்தது. அக்குடும்பத் தலைவி ஏறக்குறைய 20-வயதிருக்கலாம். அவள் அரையாடையோடு, மேலாடையின்றி, வீட்டுவேலையை யனுசரித்து, கூச்சமின்றி நடந்து போய்க் கொண்டிருந்தாள். அந்நாட்டு நாயர்களுக்குள்ள வழக்கமாயினமையின் கூச்சமின்றி நடமாடினர். இவ்விதம் அந்நாட்டு உயர்ந்த சாதியார்களாகிய நாயர்களோ மேலாடை யணியா திருக்க "உயர்ந்த சாதியார்கள் அணிவதைப்போல் அணியப்படாதென" க்கூறிய கவர்ன்மென்டு ஆடருக்குப் பொருளென்னே? எல்லாம் பொறுமையும், வீண்வம்புமேயாம். தம்மைப்போல் மற்றவர்களும் இருக்கவேண்டும். தமக்கு மேற்படப்படாது என்பதே இக்கலகத்தின் நோக்கம். தற்காலம் வட திருவிதாங்கூரில் நாடார் பெண்கள் மேலாடை அணிந்திருத்தலையும், நாயர் பெண்கள் அணியாதிருத்தலையும் கண்கூடாகக் காணலாம். (பத்திராதிபர்.)

ஸ்ரீமான், கூ. மு. அ. வ. பழனியப்ப நாடார்,
அவர்களின் அகாலமரணம்.

நமது சங்கத்தின் காரியதரிசியும்; மதுரையில் ஓர் பிரபல வர்த்தகரும், நமது குல தாதாவின் ஜேஷ்ட குமாரரும்; தமது வாழ்நாட்களை முற்றிலும் குலசேவைக்காக அர்ப்பணம் செய்தவருமான ஸ்ரீமான், கூ. மு. அ. வ. பழனியப்ப நாடார் அவர்கள் தமது ஜெனன நகரமாகிய விருதுநகரில் தமது ஜனசமூகத்தவர்களையும் சுவாபிமானிகளையும், தனது உற்றார், பெற்றார், பாரியார், குழந்தைகளையும் நீத்து ரக்தாக்ஷி ஞு மாசி மீ 10உ (21—2—25) சனிக்கிழமை மாலை 5-மணிக்கு இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகை யடைந்தனர்.

ஈசா! இதுவும் நின் சோதனையா?

அபிமானிகளே!

“ஜாதியசேவை தெய்வீக பூஜை” என்னும் கொடியை சிரமேற்றுக்கொண்டு, நமது சங்க காரியதரிசி பதவியில் அமர்ந்து நமது குலத்திற்கு அரிய தியாகம் புரிந்த அன்னாரின் ஆத்மா, இறைவன் திருவடியில் சாந்த நிலையடையும்படி, அன்பர்கள் கூட்டங்கூடி இறைவனை பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பா. ம. பாண்டிய நாடார், காரியதரிசி.

குறிப்பு:—யாம் இரண்டு வாரத்திற்குமுன் மதுரையில் அவரது மாளிகையில் நேரிற் கண்டு பேசியபோது, இவ்விதம் அவருக்கு நேருமென நினைக்க இடமில்லாமலிருந்தது. என்னே! உலக வாழ்க்கையின் முடிவு. (பத்திராதிபர்.)

மந்திரம்.

இம் மந்திரயோகம் என்னும் பெருநிதி ஆதியில் ‘இரண்யகர்ப்பா’ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அது கொண்டே ஸ்ரீ வாதராயண முனிவர் தோமான் மாபாரதத்தில் ‘ஹிரண்ய கர்ப்பனே யோகத்தை முதலில் குறித்தவன் வேறொருவனில்லன்’ என்று மோக்ஷ தருமத்திற் கூறினர். அதே யோகசாஸ்திரம் கலி தொடங்கும்வரை இத்தேசத்தில் வழங்கப்பட்டு வந்தது. பெரும்பயனையும் விளைத்தது. பிறகு அவ்வளவு பெரியநூலைக் கற்று அதிற் கண்டபடி நடந்து பயன் பெறவாற்றலற்ற மாந்தரை நோக்கக் கருணைகூர்ந்து ஆசிரியர் ஸ்ரீ பதஞ்சலி மாமுனிவர் அவ்வியோக சாஸ்திரத்திற்கு ஒரு சூத்திரம் செய்துவைத்தார். அது இக் கலிகாலத்தவர் யோகசாஸ்திரத்திற்கு முதனூலாய் விளங்குகின்றது. அதற்குப் பிரமசூத்திரம் வகுத்தருளிய ஸ்ரீ வாதராயணமாமுனிவர் பாடியம் இயற்றினர். அதற்கே கவிவாணர் புகழ்ப் பதம்பெற்றுக் கபால சோதனஞ்செய்த மகானுபாவனான ஸ்ரீ போஜ பூபால[illegible]ர் உரைசெய்தான். பிறகு ஸ்ரீ வாசஸ்பதி மிச்சிரர் என்னும் மகாபண்டிதர் ஒரு பேருரையும் செய்துவைத்தார். இனி நமதாசிரியர் பதஞ்சலியார் எழுதிய யோகசூத்திரங்கள் எல்லாம் சற்றேறக்குறைய அதே மொழிகளாய் ஸ்ரீ சிவமகாபுராணத்தில் வாயுசங்கிதையில் காணப்படுகின்றன. ஆயின் இவர் யோக சூத்திரத்தைப் பார்த்து வியாஸாசாரியார் புராணம் எழுதினாரோ அல்லது புராணத்தைப் படித்துப் பதஞ்சலியார் சூத்திரம் எழுதினாரோவென மயக்கமுண்டாகின்றது. இங்கு இருவகையிலும் உள்ள யுக்திகளை எடுத்துக்காட்டிப் பிறகு எதேனும் ஒன்றைப் புத்திக்கெட்டியமட்டில் உறுதிப்படுத்துவாம். இந்த சிவபுராணம் எழுதிய வியாசர் யோகசூத்திரங்களுக்குப் பாஷியம் எழுதியிருக்கிறார். அன்றி வியாசர் எழுதிய சிவபுராண வாயுசங்கிதையில் அப்பதஞ்சலியின் தோழரான வியாக்கிரபாதர் அவர் குமாரரான உபமன்யு பகவான் இவர்கள் கதைகள் சொல்லப்பட்டது. ஆயின் வியாஸாசாரியர் தாமே முன்யோக சூத்திரங்களுக்குப் பாடியமியற்றி அவ்வாசனையால் அந்தப் பொருள்கள் மனதிலமைந்திருந்த சமயத்தில் அப்

பொருள் நிறைந்த அநேக செய்யுட்களை சிவபுராணத்தில் அமைத்தார் எனச் சொல்லாகும். இனி யோகபாடிய வுரையாசிரியர் ஜபாதித்தியர் இவ்விஷயம் இத்தன்மையதென எடுத்துக் குறித்தாரில்லை.

அங்ஙனமே ஆசிரியர் பதஞ்சலியார் பின்னவதரித்தவர் என்பதில் சில குறிகள் உண்டு. மாபாரதத்தில் 'ஹிரண்ய கர்ப்பனே யோகத்தின் தொல்லாசிரியன்' என்று வியாஸர் திருவாக்கிருத்தலால் அக்காலத்தில் ஹிரண்ய கர்ப்பனின்றி வேறு யோகாசிரியர் இருப்பதாகப் புலப்படாததாலும் பதினெண்மகா புராணங்களையும் செய்து அதன் சாரமாகப் பாரதமியற்றினார்' என்று மாச்சிய புராணம் கூறுதலாலும் மாபாரதத்தின் முன் செய்யப்பட்ட பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஸ்ரீ சிவபுராணத்தில் யோக சூத்திரப் போலிகள் அமைய நியாயமில்லை.

இங்ஙனம் ஓர் துணிபின்றிக் கிடக்கும் இவ்விஷயத்தில் சில நவீனர்கள் 'யோக சூத்திராசிரியரான ஸ்ரீ பதஞ்சலிமாமுனிவர் வியாஸருக்குப் பிறகே பிறந்தவர் என்றும் அவர் வியாசர் எழுதிய புராணத்தைப் பார்த்தே இவ்வியோக நூலை இயற்றினர் என்றும் யோக பாடியம் வகுத்தருளிய வியாசர் வேறு என்றும் முடிவுரை கூறுகின்றனர். இங்கு எமது துணிபிது. 'இவ்விரு குருமாரும் ஒரேகாலத்திருந்தவர். இவர்களியற்றிய பெருநூல்கள் மட்டில் முன்பின்னாக வியற்றப்பட்டன' என்பதே. எங்ஙனமெனில், வியாஸாசாரியர் புராணங்களையும் பின் மாபாரதத்தையும் முறையேயியற்றினர். இதன் பின்னர் யோகசூத்திரம் ஸ்ரீ பதஞ்சலி பகவானாலியற்றப்பட்டது. பிறகு யோக சூத்திரங்களுக்கும் பாடியம் வியாஸர் செய்தருளினர். 'என்று இவ்வித வழி ஒப்பாதொழியின் எவ்விதத்தும் பொருத்தம் கூறுவது முடியாது பாருங்கள் நமது தேசத்துப் புலவர்களில் முதன்மைபெற்ற ஸ்ரீ நாகேச பட்டர் தாமியற்றிய 'மஞ்சூஷா' கிரந்தத்தில் யோகபாடியம் இயற்றின ஸ்ரீ வியாசபகவான் தாம் இயற்றிய பிரம சூத்திரத்தின் அவாநிலைபற்றி அதிலுள்ளவைகளையும் கொள்ளலாம்' என்றுரைக்கிறார். மேலும் பதஞ்சலியார் மாபாடிய மூலத்திற்றானே 'வியாஸ வருட' என்று தொடங்கி வியாகரண வார்த்திகக்காரர் ஆசிரியர் காத்தியாயனர் கூறுதலால் ஆசிரியர் பதஞ்சலியார் அவர்க்குப் பிந்தியவர் எனக் கூறுவது எங்ஙனம் அமையாதொழியும்? இங்கு அதிகம் சொல்லவேண்டுவது வியாகரணத்தைப் பற்றி எழுதியவிடத் தெழுதினும். மீண்டும் இங்கெழுதோம். இங்கு முடிந்ததிது. ஸ்ரீ வியாசர் பதஞ்சலியார் இருவரும் ஒருகாலத்தவரே. இவர் இயற்றிய நூலிரண்டும் முன்பின்னாக வமைந்து இனி பலநூல்களை இயற்றியும் பலகாலஞ்சென்றுமுள்ள ஓர் கிழவாசிரியர் தமக்கு வயதிற்சிறிது தாழ்ந்த புலவர் எழுதிய பெருநூலுக்குரையிடல் கூடாதென்றுவது அமையாதென்றுவது யுக்திக்கொவ்வாதென்றுவதுண்டோ? ஆயின் வியாஸர் முதலிய மூதறிஞர் இத்திவ்விய சாஸ்திரத்தை ஆதரித்தார் என்பதிற்றடையேதுமில்லை. இனி இதற்குப் பின்னாசிரியர் அநேகர். அவர்களுள் ஸ்ரீ ஜயாதித்தியாசாரியர் ஒருவர். மற்று ஸ்ரீ பகவான் சங்கராசாரியர் ஸ்ரீ ஸநத்ஸுஜாதீய பாடியத்திலும் இராஜயோக பாடியத்திலும் யோகத்தைப் பற்றிய பல விஷயங்களை உபதேசித்தார். ஆயின் இதனால் யோகம் மறுக்கப் பட்டதறிக என்று சூத்திரம் கூறுதலால் ஆசிரியர்க்கு யோகம் அசம்மதமோவெனின் அற்றன்று. அவர் கூறும் "ஸத்வ புருஷான்னிய தர்க்யாதி "(அதாவது ஸத்வம்-காணும் பொருள், புருஷன்-ஆன்மா, அந்நியதா-வேற்றுமை, க்யாதி அறிவது)' யேமோக்ஷ சாதனம் என்பது மட்டில் மறுக்கப்பட்டதேயன்றி வேறேதுமில்லை என்றறிக. அன்றேல் அஃதங்ஙனமாக, சைவபாடியம் இயற்றிய ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் "பதிக் கொவ்வாமையால்" என்றும் சூத்திரம் ஹிரண்ய கர்ப்பயோகத்தை மறுப்பதாகக் கூறியதுதான் எவ்வாறமையும் எனில், கூறுதும்: யோகசாஸ்திரம் ஒன்றிற்றான் பரமேசுவரன் நிமித்த காரணமே எனக் கூறியுள்ளது. அது பொருந்தாதெனக் கொண்டு அதைமட்டில் மறுப்பதே ஆசிரியர்

கருத்து. அது கொண்டே 'சிவாகமங்களிலும் பசுபதி நிமித்த காரணனாகவே சொல்லப்படுகின்றமையால் அவ்வாகமங்களை இச்சூத்திரத்திற் கிலக்காக்காது ஹிரண்ய கர்ப்பயோகத்தை மட்டில் இலக்காக்கியது எதுபற்றி' என்னும் ஆசங்கை நிகழ 'யாம் வேத சிவாகமங்கட்கு வேற்றுமை காண்கிலேம். வேதமும் சிவாகமுமே எனச் சமாதானங் கூறினர். இதற்கு அங்கமைந்த கருத்திது. வேதங்களிலும் சிவாகமங்களிலும் [உலகத்துக்குக் கடவுள் நிமித்தமும்] உபாதானமும் [முதற்காரணமும்] என்னும் (விஷயத்தில்மட்டில்) வேற்றுமை காணப்படவில்லை. வேதமும் (இவ்விஷயத்தில்) சிவாகமமுமே. அவ்வாகமங்கள் கூறியவற்றையே கூறுதலால் என்க" என்பதே (உலகத்துக்குக் கடவுள் அபின்ன நிமித்தமும் உபாதானமும் ஆவார் என்பதும் யாகம் முதலிய வேதவிஹித கன்மங்களாற்றன் ஞானமும் ஞானத்தாற் பரமபதியினது வீடுலகை கூடும் என்பதும் சைவமா பாடிய கர்த்தாவாகிய ஸ்ரீ சைவசிகாமணி ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார் கருத்தென்பது அவர் பாடியம் படித்தோர்க் கினிதுவிளங்கும்.) தற்காலத்துச் சில சைவவாசிரியர் அவைதிகம் என்றும் ஆகமங்களுட் காணுதலென்றும் அமைந்ததால் யோக சாத்திரத்தை அவ்விஷயத்தில் பொய்யாக்கியதாயும் உள்ள கேவலநிமித்த காரணவாதம் சிவாகமங்களில் உள்ளது' கேவல நிமித்த காரணவாதம் என்று மட்டில் அவைதிகம் என ஆசிரியர் கருதி யோகத்தை அவ்விஷயத்தில் மறுத்தாராயினும் மற்றைய விஷயத்தில் ஒப்பாதொழிந்திலர். இதுமட்டோ! மேலும் பலபுராணங்கள் யோக வேற்றுமையையும் விளக்குகின்றன. அதை அவசியம் படிக்கவேண்டும் என்பதைப் பின்எழுதுவாம்.

(இன்னும் வரும்.)

———(o)———

ஓர் சாஸனம்.

(A. V. தாஸன், கொம்மடிக்கோட்டை.)

திருநெல்வேலிஜில்லா தென்கரைத்தாலுகா 5-ம் நீம் ஆயக்கட்டுச் சுருணை கொம்மடிக் கோட்டை நஞ்சை புஞ்சை அளவு ஒழுகிலிருந்து எடுத்தெழுதியது. ... ...

கொம்மடிக்கோட்டை மேல்வருப்பு நஞ்சை பயிரொடுப்பு.

௲௮௱௨௵ டிசம்பர்௴ ௪௨ கொல்லம் ௯௱௭௰௮௵ கார்த்திகை௴ ௨௰௯ ௸ ௨௰௯ நஞ்சை ...
... ... (ஒப்பம்)

இப்படிக்கு. முத்தையபிள்ளை

ஷை நாட்டுக்கணக்கு கலியுகலன்

ஷை ஊர்க்கணக்கு மன்னர்

ஷை அம்பலு வேலாயுதம் நாடான்

இந்தப்படிக்கு கைஎழுத்து வைத்து இருக்குது (ஒப்பம்) சரிபார்த்தது ரிக்கார்ட்டு குமஸ்தா ரெங்கத்துரை.

(True Estract) RevenueDepartment
Copied by S.d Enclosur No 4
Compared by S.d Current No 1206
C. Subramanyam, Deputy Collector

நூற்றிருபது வருஷங்களுக்கு முன் "நாடார்" என்னும் பெயர் இங்கு வழங்கி வந்ததற்கு கவர்னமென்டிலிருந்து காப்பிக் காயிதத்தில் எடுக்கப்பட்டுள்ள ஆதாரம் ஒன்றை பெயர்த்தெழுதி இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

இதையும் தங்களுடைய பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அம்பலம் வேலாயுத நாடாருடைய வாரீஸ்தார்கள் பரம்பரையாய் சவர்ன்மென்டு வேலையிலிருந்து வந்ததோடு இப்பொழுதும் அந்தவாரிசைச் சேர்ந்த வே. கா. வேலாயுத நாடார், வே. கா. சந்தோஷ நாடார் வே. கா. அவத்தாரணப்பெருமாள் நாடார் முதலானவர்கள் இங்கு இருக்கிறார்கள், அவர்களில் வே. கா. அவத்தாரணப் பெருமாள் நாடார் இந்த கிராம முன்சீப் வேலை பார்த்து வருகிறார்.

குறிப்பு:—நாடார் என்பதைப் புதுப்பட்டம் எனக் கூறிப் புலம்பிய நேற்றுமுளைத்த புதுப் பட்டதாரிக ளறிவார்களாக. (பத்திராதிபர்.)

சில்லரைக் கோர்வைகள்.

தேசோபகாரி.

ஞாயிறுதோறும் வெளிவரும் தேசோபகாரி என்னும் சஞ்சிகையானது, பேரறிவாளர்களா லெழுதப்படும் அரிய தேசிய வியாசங்களுடன் காலநிலைமையைக் காட்டி அதன் பெயருக் கேற்ப விளங்குகிறது. இச்சஞ்சிகை வாசிக்கு மெவரும் அரசியல் போக்கைத் தெற்றென உணர்வர். தேசபக்தியை யூட்டும் பத்திரிக்கைகளுள் இதை சிரேஷ்டமாகக் கூறலாம். சந்தா 5-ரூபாய் இப்பத்திரிக்கையே நமது பிற்கால வாழ்வைக் கற்பிக்கக்கூடியதாதலின், தமிழர்களாகிய நம்மில் ஒவ்வொருவரும் இதை வாசிக்கவேண்டியது அத்யாவசியம்.

விலாசம்:— தேசோபகாரி, No. 45,
36-th street Rangoon.

"சிந்தாமணி."

ஆங்கில நாகரிக முதிர்ந்துவரு மிக்காலத்தில் நமது மகளிரின் நன்மையைக்கோரி உழைக்கும் பத்திரிக்கை சிந்தாமணியே. இது சோ. தரி. வி. பாலம்மாளை ஆசிரியையாகக் கொண்டுள்ளது. தேசியவியாசங்கள், கட்டுரைகள், பெரும்பாலும் பெண்கள் கல்விகற்கவேண்டிய முறைகளை இனிய நடையில் கூறுகிறது. பிரதிமாதமும் மேதைகளின் புகைப்படமொன்று மகுடஞ்சூட்டி யுலவுகிறது. பாரதகண்டத்து ஜெனிக்க ஒவ்வொரு பெண்ணும் சிந்தாமணியைக் கரத்தில் வகிப்பது கடனாயிருக்கிறது. வருடச் சந்தா மூன்று ரூபாய்.

விலாசம்:— சிந்தாமணி ஆபீஸ்
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மைலாப்பூர், சென்னை.

தேசிய இயக்கம்.

உலகம் போற்றும் மகாத்மா காந்தி பெல்காம் சபையில் அக்ராசனம் வகித்து, யாவரும் நூற்பதே தேச விடுதலைக்கு வழி யென்றும், இந்திய னெவனும் அஹிம்ஸா மதத்தையே.

தேசபந்து தாஸ் தனது எட்டுலக்ஷத்துக்கு மேற்பட்ட ஆஸ்தியைப் பொதுநன்மைக்காக ஓர் சங்கத்தாரிடம் ஒப்புவித்துவிட்டுத் தானும் தன் மனைவியுமாக ஓர் குடிசையில் வாழ ஆரம்பித்துவிட்டார். தனது அருமந்த புத்திரனையும் முன்பு சிறைக்கனுப்பினர். பண்டு அரிச்சந்திரன் விரதத்திற்காகப் புலையனுக் கடிமையாகிப் மனைவியையும் குழந்தையையும் விற்றது நேயர்களுக்கு ஞாபகம் வரட்டும்.

சமரஸ மதங் கற்பிப்பதற்காக ஏற்பட்டுள்ள சேரன் மாதேவி குருகுல வித்தியாசாலை யுள்ளும் புகுந்திருக்கும் தீண்டாமை எனும் குட்டிச் சாத்தானை, ஓட்டிவிடுவேனென, தமிழ் நாடு அரும்பெருந் தொண்டருமான வைத்திய சாஸ்திர வரதராஜுலு நாயுடு அவர்கள் கங்கணங்கட்டி உழைக்கிறார்.

வைக்கம் சத்தியாக் கிரகத்திற்கு G. F. ஆண்ட்ரூஸ் போய் தொண்டர்களுக்குத் தேறுதல் கூறி, அவர்கள் இறைவனருளால் ஜெயம் பெறுவர் என ஆசிர்வதித்து வந்தனர். சத்தியாக் கிரகங்கள் தளர்வடையாது உழைக்கின்றனர்.

பிரபல பீடி தொழிற்சாலை கர்த்தாக்களாகிய முக்கூடல் ஸ்ரீ சொக்கலால், ஸ்ரீ குமரவேல் நாடார் இருவரவர்களிடமிருந்துங் காலண்டர்கள் கிடைக்கப்பெற்றோம். பெரிய அளவில் ஆங்கிலம், தெலுங்கு, தமிழ் தேதிகளை மிகவும் தெளிவாய் அச்சிடப்பட்டுப் போட்டோப் படங்களுடன் கூடியவையா யிருக்கின்றன. மிகவும் அழகு வாய்ந்தவை.

கோப்பிறைச்சன்பட்டி, வள்ளியப்ப நாடார் க்ஷத்திரிய வித்தியாசாலை 3-ம் ஆண்டு நிறைவு விழா 16-1-25-ல் மதுரை கலெக்டர் G. F. Hall Esq O. B. E., I. C. S. அக்ராசனத்தில் நடைபெற்றது. சங்கத்தில் அரிய உபந்யாசங்கள் நடைபெற்றதுடன் மாணவர் மாணவிகட்குப் பரிசு அளிக்கப்பட்டது.

இராமநாதபுரம், டி. மு. கோர்ட்டு.

கோர்ட்டில் 1925ஆ ஒ. நம்பர் 25
1925 ஐ. ஏ. நம்பர் 61

ப. தாயப்ப நாடார் வாதி.
துரைராஜா நாச்சியார்வகையரா பிரதிவாதிகள்.

இராமநாதபுரத்தில் நாடார் பேட்டைக்குத் தெற்கு மேற்படி பேட்டை வாசலுக்கும் மேற்கு ரஸ்தாவுக்கும் வடக்கு மேல்புரம் இருக்கும் வாதி கடைக்கும் கிழக்கு இதற்குள்ளான கிழமேல் ஜாதியடி 11 தென்வட ஜாதியடி 9 உள்ள இடம் நாடார் Community க்குப் பாத்தியம் என்று Declare செய்து அதில் பிரதிவாதிகள் பிரவேசிக்கக் கூடாது என்று சாஸ்வத இன்ஜங்ஷன்பெற மேற்படி நாடார் Community க்காக மேற்படி தாயப்ப நாடார் வாதியாயிருந்து பிராது செய்யவும் அவரே மேற்படி Communityயை represent செய்யவும் மேற்படியாருக்கு அனுமதி கொடுக்கவேண்டியதாய் மேற்படி கோர்ட்டில் 1925ஆ ஐ. ஏ. நம்பர் 61-ல் மனுப்போடப்பட்டு, அது 26-3-1925ல் ஆர்டருக்கு வருமென்று இதின்மூலம் தெரியப்படுத்தியிருக்கிறது.

E. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் வாதி வக்கீல்.
(25-1-25.)

வள்ளிகாந்தன் தோத்திரமஞ்சரி

கந்தபுராண முதலிய சிவபுராணங்களிலிருந்தும் திருமுருகாற்றுப்படை முதலிய சங்கநூல்களிலிருந்தும் பிள்ளைத் தமிழ் மாம்பழக்கவி பிரபந்த முதலியவைகளிலிருந்தும் சிவசுப்பிரமணியர்மீது பக்தி யூட்டக்கூடிய இனிய பாக்களுடன், இறுதியில் திருப்புகழ் கீர்த்தனங்களும் உடையது. குமரனைக் கொண்டாடும் ஒவ்வொருவர் கரத்திலும் இருக்கவேண்டிய புத்தகமிது ஒன்றே. விலை அணா எட்டு. வேண்டியவர்கள்
சுந்தரமூர்த்தி பிள்ளை, நெ. 2, கந்தசாமிமுதலி தெரு, கிருஷ்ணாம்பேட்டை, மதராஸ்.

ஆன்ம விசாரம்.

(ஓர் பிராமணோத்தமனால் எழுதியது)

சிறுவர்களுக்குச் சிற்றிலிழைப்புவிளையாட்டு அவர்கள் வீட்டில் வெகு இன்பதுன்பமாயிருக்கும்; எல்லாம் அநித்தியமாய் க்ஷணத்தில் அழிந்துவிடும். முதியோர் நடாத்தும் உலக வாழ்க்கையும் இங்ஙனமே தம்மட்டில் இன்பதுன்பமாய் க்ஷணத்தில் அழிந்துவிடுகின்றது. இரண்டிலும் வேறுபாடென்னை! மெய்யுணர்ந்தார்க்கு உலகவாழ்க்கை சிற்றிலிழைப்பு வாழ்க்கையாய்ப் புலப்படுகின்றது.

ஈசுவரன் பிரபஞ்சத்தை நடத்தும் விதமொன்று; சீவர்கள் தாம் எண்ணி நடக்கும் விதமொன்று. ஈசுவரன் சீவர்களுக்குத் துன்பத்தை யூட்டிப் பக்குவப்படுத்தும் நித்தியசுகத்தைக் காட்டுகிறார். சீவர்கள், தங்கள் சாமர்த்தியத்தினால் துன்பங்களை அகற்றிச் சுகத்தில் வாழவேண்டுமென்றே பிரயத்தனஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். ஈசுவரன், அவர்கள் சுகத்தை முயலும் முயற்சிவழியாகவும், துன்பத்தை அகற்ற முயலும் முயற்சிவழியாகவும் தாம் கருதிய துன்பத்தை யூட்டி நடத்துகிறார். மெய்யுணர்ந்தார்க்கே இந்த உண்மை விளங்கும்.

குரக்கு அதிக சேட்டை உள்ளது; அது பயனற்றவைகளை யெல்லாம் செய்யும்; அதற்குத் தான் செய்வனவெல்லாம் பயனுடையவைகளென்றே அபிப்பிராயம். மனிதருள்ளும் திருத்தமற்றவர்கள் இங்ஙனமே.

நாம் நம்பொருட்டாகவே ஜீவர்களுக்கு எதையும் செய்வோம்; ஈசனோ ஜீவர்களுக்கு அவர் பொருட்டாக எதையும் செய்வர்.

தாமாய் உடம்பட்டுத் துன்பம் அனுபவிக்கிறவர்கள் உடனே பயன்பெற்றவராகின்றனர். துன்பத்துக்கஞ்சிச் சகிக்காது தள்ளப்பட்டவர்கள் பின்பு துன்பத்துக்கு விலைகொடுத்தவராகின்றனர். தம் பிள்ளைகளைச் சகத்திலே பயிற்றும் பெற்றோர், பின்பு அவர்களுக்குத் துன்பத்துக்கு விலைதீட்டவராவர்.

ஒருவனுக்கு ஞானம் [illegible]

லாவிட்டால் மற்றொருவனும், இன்னும் பல பேரும் ஈசுவரனுமேயுண்டு. ஒருவன் தன் தேர்ச்சிக்குக் கற்கவேண்டுவதுதானே போலத் தன்னை மெய்யொழுக்கில் நடத்துவதற்குத் தனே வேண்டியவனாயிருக்கிறான். ஆதலால், தான் மெய்ந்நெறியிற் சாத்தியம் பெற்று முடியும்வரையும் பிறரைப் போதித்துத் திருத்தவென்று முயல்வது தவறு.

முரட்டுத்தனமான மனைவி இல்லாதவனுக்கு அவளுடைய அனுபவந் தெரியாது. முரட்டுத்தனமான வேலையாள் இல்லாதவனுக்கு அவனுடைய அனுபவந் தெரியாது. சாந்தமான மனையாளை யுடையவனிலும் முரட்டுக்காரியை யுடையவன் படிப்பாளி. மற்றவைகளிலும் இப்படியே. முரட்டாளை யுடையவனுக்கும் அஃதொன்றே தெரியும். தனக்கில்லாமற் பிறருக்குடையவைகளா யிருப்பவைகளையும் தன்னது போலப் பாவனைசெய்து எல்லா அநுபவமும் தான் உடையனாய் வந்தவனே ஞானி. அவனே எல்லாருக்கும் ஒப்ப நடக்கும் திறமை பெற்றவன்.

வறியவர்களுக்கு வறுமை வராது. வறுமை வருவது செல்வர்க்கே. ஆதலால் செல்வன் எப்பொழுதும் வறுமை வரும் என்னும் அச்சம் உடையவனா யிருக்கின்றான். வறியவனுக்கு அஃதில்லை. செல்வமான நிலையிற் பயின்றவன், அதற்கு அருமைவந்தபோது வறியவனாகிறான்.

ஒருவன் நமக்கு ஒரு குற்றத்தை விளக்கமில்லாமற் செய்தால் பின்பு அவன் விளங்கித் தெரிந்திருக்கும் பொருட்டாக நாம் அதை அவனுக்குத் தெரிவியாதிருக்கக் கடவோம்.

பிறர் நமக்குச் செய்யும் குற்றங்களை அல்லது தீங்குகளைப் பொறுப்பதற்கு முக்கியமான பரிகாரம், தான் பிறர்க்குச் செய்திருக்கும் அவைபோல் அனைவற்றையும் கிளறி எடுத்துச் சமன் பண்ணுவதே. இது இதற்கு நியாயமானது. ஆகையால், நம்மிடத்தில் குற்றம் பெரும்பட்டவை எவ்வளவு மிகுந்திருக்கின்றனவோ அவ்வளவும் நாம் ஜீவர்களை நம்மைப்போல் சமானமாக பண்ணி (காமாக) சடேற்றம் பெறுவதற்கு அருகருக்காம். தன்னிடமுள்ள குற்றங்கள், அவை கொண்டு பிறனைத் தானாகப் பாவனை செய்வானுக்கு மட்டுமே நன்மைக் கிடமாம். அது செய்யமாட்டாத துவித பாவகனுக்கு அத்தனையும் தீங்குக்கே யிடமாம். பிறர்செய்த குற்றமொன்றற்குச் சமமானது நம்மிடம் இல்லாவிட்டால் "நாமும் அவனைப்போன்ற உபாதி =(செயற்கை) வசப்பட்டிருந்தால் இதே குற்றத்தைச் செய்ய வசப்பட்டிருப்போம்" என்று சமாதானம் பெற்றுக்கொள்.

மலத்தைத் தின்னும் பன்றிக்கு அது குணமாகவே இருக்கிறது; அதை இகழ்பவனே குற்றவாளி. அதுபோலப் பிறரை அவர் குற்றம்பற்றி இகழ்வோரே குற்றவாளிகள். அவருக்கும் அது குணமாயின் அவரை இகழ்வோரும் குற்றவாளிகளே.

துன்பத்துக் கஞ்சுகிறவனை ஈசன் பாம்பாட்டுகிறான்; ஒரு பித்தனைச் சிறுவர்கள் கோபம் மூட்டி விளையாட்டுப் பார்ப்பதுபோலிருக்கின்றது. துன்பத்துக்குப் பயந்து தப்ப முடிவது வராது.

ஒருவனை, அவன் செய்த ஒரு குற்றம் பற்றி இகழ்வது தவறு. அதன் காரணமாகிய அவனது மலபந்தமே இகழப்படற்பாலது. அங்ஙனமாயின் பந்தமுடையராய நாம் யாவரும் ஒருங்கே அதுபற்றி இகழப்படல் வேண்டும்.

ஜீவர்களுக்குள்ள மலபந்தம் அவர்களுக்குத் துன்பமாய் வட்டியே தொலையும். ஆகலால் துன்பத்துக்குத் தப்ப முயன்றால் மலபந்தம் தொலையாது; தொலையாதவரை நெடுகத் துன்பமே. ஆதலால் துன்பங்களுக்குத் தலை கொடுத்து விட்டால் அது வாயாக மலபந்தம் தொலையும். பின்பு துன்பமேயில்லை. மருந்துண்பதாகிய துன்பத்தைச் சகிப்பவனுக்கே ரோக காரணமாக வினையும் துன்பம் அறும்.

கயரோகி இருமுகிறான். அவன் இருமுவதும் தன் வருத்தத்தைச் சகிக்கமாட்டாமலே. அருகில் இருக்கிறவர்கள் தங்களுக்கு அது கேட்க வருத்தமாயிருக்கிறதென்று அவனை வைகிறார்கள். இதில யார் சரி? யார் குற்றவாளி?

(வரும்)

(இந்துசாதனம்)